முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி
M.A.C.O.P. No. 301/2023

2025–ம் வருடம் செப்டம்பர் மாதம் 22–ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873–ம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: திரு. விஜய் (எ.ம.சா.1) | தொழில்: |
| த/பெ: | இனம்: |
| கிராமம்: | வயது: |
| மாவட்டம்: | நாள்: 22–09–2025 |

**முதல் விசாரணை:**

சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.

நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னுடைய பெயர், த/பெ. சாமிக்கண்ணு, பாலசமுத்திரம், பழனி வட்டத்தில் வசிக்கிறேன். கடந்த 01.09.2023ம் தேதி TN 57 AZ 9570 என்ற வாகனத்தை யார் ஓட்டினார் என்றால் நான் தான் ஓட்டினேன். அந்த சமயம் என்ன நடந்தது என்றால் இரவு 08.50 மணியளவில் அம்மா உணவகம் அருகில் மினிபஸ்ஸை நிறுத்தி வைத்திருந்தேன், மழை பெய்ததால் ஒரு வயதான பாட்டி அதில் ஏறும்போது வலுக்கி கீழே விழுந்துவிட்டார்கள். அச்சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் இல்லை. அன்றைக்கு தான் முதல் நாள்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –**

நான் விபத்து சம்பந்தமாக சொன்னதுபோல் முதல் தகவல் அறிக்கையில் சொல்லவில்லை என்றும், வயதான பாட்டி நடந்து கொண்டிருக்கும்போது நான் தான் மினிபஸ்ஸை ஓட்டி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் தெரியாது. பழனி டவுன் காவல்நிலையத்தில என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். விபத்திற்கு நான் தான் காரணம் என்று ஒப்புக்கொண்டு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அபராதம் செலுத்தினேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் ஓட்டி சென்ற வாகனத்திற்கு காப்பீடு இருந்ததா என்றால் இருந்தது. நான் ஓட்டுநர் உரிமம் இருந்துகொண்டு இல்லை என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.